# ‘ சொற்கோ ’ பட்டம்

# 2018



த.ஸ்டாலின் குணசேகரன் தொடர்ந்து 35 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மேடைகளில் இலக்கியம், கலை, மொழி, அறிவியல், அரசியல், வரலாறு, சமூகவியல் ஆகிய துறைகள் சார்ந்த தலைப்புகளில் இடைவிடாது சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருவதையும், அவ்வாறான சொற்பொழிவுகள் அனைத்தும் சமூக நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்பட்டு வருவதையும் பாராட்டி சத்தியமங்கலம் ஸ்ரீ பண்ணாரி அம்மன் கல்வி அறக்கட்டளை சார்பில் இவருக்கு ‘சொற்கோ’ என்ற பட்டம் வழங்கப்பட்டது.

சத்தியமங்கலம் லிட்டில் பிளவர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 12.01.2018 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் இப்பட்டத்தை அறக்கட்டளைத் தலைவர் திரு கே.என்.சந்திரசேகரன் வழங்கினார்.

நிகழ்வில் கல்வி நிறுவனத்தின் இயக்குனர் திரு டபள்யூ. பாஸ்கோ இறையன்பு, நிர்வாக அலுவலர் திரு எஸ்.ஜெ. ஹரிராம் சந்தர், முதல்வர் திருமதி எஸ்.டி. நிர்மலா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இவர்களுடன் மாணவப் பிரதிநிதிகளும் விருது வழங்கும் நிகழ்வில் இணைந்து கொள்ள பள்ளி நிர்வாகத்தால் மேடைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

